Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.68/2017 PW-1**

Name : மங்கை
Father / Husband name :
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 27.03.2025

**1 வது எதிரியின் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

கிரைய ஒப்பந்தத்தில் எனது கணவரும் மதன்லாலும் கையொப்பம் செய்ததாக சொல்லியிருக்கிறேன், அந்த மதன்லால் என்பவரை சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. கிரைய ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்று சொல்லியிருக்கிறேன், அதனை ஒப்பிட்டு பார்க்க நீதிமன்றத்தில் என்னிடம் மாதிரி கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கவில்லை. போலிசாரிடம் நான் புகார் கொடுத்தபோது என்னிடம் போலிசார் மாதிரி கையொப்பம் பெற்றார்களா என்றால் நான் போலிசில் புகாரே கொடுக்கவில்லை. போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னிடம் மாதிரி கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த பத்திரத்திலுள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்றால் என்னுடைய கையொப்பம் தான். அந்த கிரைய ஒப்பந்த பத்திரத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். இதுவரையில் நீதிமன்றத்தில் அசல் கிரைய ஒப்பந்த பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் வேலாயுதம் 1997 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது கணவர் உயிரோடு இருக்கும் வரையில் நான் சிவில் வழக்கோ, போலிஸ் வழக்கோ கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, நான் 1991 ல் கொடுத்துவிட்டேன். எனது கணவர் உயிருடன் இருக்குவரையில் கிரிமினல் வழக்கும், சிவில் வழக்கும் கொடுக்கவில்லை, பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவர் இந்த முழு கிரையதொகையும் வாங்கிவிட்டதால் பொய்யான புகார் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டதால் நான் அவர் உயிரோடு இருக்குவரையில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த சொத்தை

விற்றபோது எனது பங்காளிகள் அனைவரும் இந்த சொத்தில் எங்களுக்கும் உரிமை உள்ளது என்று விற்றது தவறு என்று எனக்கு நோட்டீஸ் அனுப்பினார்களா என்றால் இல்லை. எனது பங்காளிகள் அந்த சொத்தை எவ்வாறு விற்றீர்கள் என்று கேட்டதால் அவர்களிடமிருந்து தப்பிப்பதற்காக இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாதிரி கையொப்பத்தையும், கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள கையொப்பத்தையும், மாதிரி கையொப்பத்தையும் ஒப்பிட்டு பார்த்தால் அது எனது கையொப்பம் என்று தெரிந்துவிடும் என்பதால் நான் நீதிமன்றத்திலும், போலிசாரிடமும் மாதிரி கையொப்பத்தை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த முழுக்கிரைய பாக்கி தொகையும் எனது கணவர் வாங்கிகொண்டதால் தான் நான் இந்த புகாரை கணவர் உயிருடன் இருக்கும்போது கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு சொத்தை விற்கும்போது முழு கிரைய தொகையும் கொடுத்த பிறகு தான் கிரைய ஒப்பந்த பத்திரத்தை விற்றவரிடம் கொடுப்பார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த தொகையும் எனது கணவர் வாங்கிக்கொண்டு தேவராஜிடம் ஒப்பந்த பத்திரத்தை கொடுத்தார் என்றால் சரியல்ல.  அந்த நிலத்தின் தற்போதைய மதிப்பு 2 கோடிக்கு மேல் இருக்கலாம் என்றால் சரிதான். அதன் மதிப்பு அதிகமாகிவிட்டதால் முழுக்கிரைய தொகையும் வாங்கவில்லை என்று பொய்யான வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கானதுரு அதிகமாக பணம் பிடிங்க வேண்டும் என்று பொய்யாக  ஜோடிக்கப்பட்டு வழக்கு என்றால் சரியல்ல.

## <u>2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பவர் பத்திரம் சான்றிட்ட நகல், ஒப்பந்த பத்திரம் சான்றிட்ட நகல், தேவராஜ் வைதேகி பெயரில் எழுதிகொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் என்றால் எனக்கு ஞாபகமில்லை. இதை தவிர வேறு எந்தெந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. நான் என்னென்ன ஆவணங்கள் கொடுத்துள்ளேன் என்று நீதிமன்றத்திலிருக்கும் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும் என்றால் சரிதான். பவர் பத்திரம் கொடுத்து ஒப்பந்த பத்திரம் கொடுத்தபோது அந்த நிலம் விவசாய நிலமாக பயிர் வைக்காமல் இருந்தது என்றால் சரிதான். 1991 ம் வருடம் அந்தயிடத்தில் பைபாஸ் ரோடு வரவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. 2015 ம் வருடம்

நான் புகார் கொடுக்கும்போது அந்தயிடத்தில் பைபாஸ் ரோடு உள்ளதால் அந்தயிடம் ஒருகோடி ரூபாய் போகும் என்று கிரைய ஒப்பந்தம் சமீபத்தில் நடந்தபோல் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த பவர் பத்திரத்தை வைத்து சிவில் வழக்கிலும் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பவர் பத்திரத்தில் " **இனி தாங்கள் எனக்காக இதனடியில் கண்ட சொத்தை மொத்தமாகவோ அல்லது துண்டு துண்டாக பிரித்தோ அதை கிரையம் பேசி எனக்காக நீங்கள் கிரையம் செய்யவும், கிரையம் பேசி எனக்ககா தாங்கள் கிரையம் செய்யவும், கிரையம் பேசிய தொகையை எனக்காக தாங்களே பெற்றுக்கொள்ளவும், அதற்குண்டான கிரைய ஆவணம் எழுதி எனக்காக தாங்கள் கை எழுத்து செய்யவும், கிரைய பத்திரத்திற்கு உண்டான சகல பாரங்களிலும், அலுவலக எண்டார்ஸ்மெனட்டுகளிலும், மாகான மாவட்ட அலவலகங்களிலும், சார்பதிவாளர் பதிவகங்களிலும் பதிவு செய்து கொடுக்கவும், தாக்கல் செய்யவும், வாபஸ் பெறவும் "** எனக்குறிப்பிட்டு நான் எழுதிகொடுத்த பவர் பத்திரத்தில் மேற்கண்ட வாசகங்கள் உள்ளது என்றால் சரிதான். அதே பவர் பத்திரத்தில் " **இதனடியில் கண்ட சொத்தை பொறுத்து தாங்கள் செய்யும் சகல காரியங்களையும் நானே நேரில் சுயமாய் செய்ததாக ஒப்புக்கொள்கிறேன், எனக்காக தரப்படும் தொகைகளுக்கு வரவு செலவு கணக்கு வைத்திருந்து நான் கேட்கும்போது என்னிடம் ஒப்படைக்க வேண்டியது "** என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். இந்த பவர் பத்திரத்தை இரத்து செய்வதற்கு முன்போ, பின்போ எதிரி தேவராஜ் என்பவரிடம் கணக்குகளை ஒப்படைக்குமாறு நோட்டீஸ் கொடுத்து அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் நோட்டீஸ் கொடுத்துள்ளேன், அதனை தாக்கல் செய்துள்ளேனா என்று ஞாபகமில்லை. எனக்கு பணம் சேர்ந்துவிட்டபடியால் தான் 10 வருடங்களாக கணக்கு கேட்டு நோட்டீஸ் அனுப்பி அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பின்னர் அந்தயிடத்தில் பைபாஸ் ரோடு வந்த பிறகு எதிரியிடம் பணம் பிடுங்கவேண்டும் என்பதற்காக இந்த பொய்யான வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பவர் பத்திரத்தில் முழு அதிகாரத்தையும் கொடுத்த பிறகு அதன் மூலம் 2வது எதிரி கிரையம் பெற்றது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. நான் ஒப்பந்த பத்திரம் போடும்போது துண்டு துண்டாக பிரித்தும், மனைபிரிவுகளாகவும் பிரிக்கவும் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள

தேவராஜ் வைதேதிக்கு கிரையம் கொடுத்த பத்திரத்தில் மார்க்கெட் மதிப்பு ரூ.20,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஒப்பந்த பத்திரத்திலோ, பவர் பத்திரத்திலோ என்று ( கேள்வி கேட்கும்பொழுது சாட்சி எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறாமல் நான் உடல் நிலை சரியில்லாமல் இருந்துவருகிறேன். என்னை மடக்கி மடக்கி கேள்விகேட்டு மென்டல் ஆக்காதிர்கள். எனக்கு இத்தனை வருடங்களாக என்ன ஞாயம் கிடைத்திருக்கிறது, என்னை திரும்ப திரும்ப அலைக்கதிக்கிறிர்கள் என்று கூறிக்கொண்டு இருக்கிறாரே தவிர எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளிக்கவில்லை. நீதிமன்றம் கூறியும் பதில் அளிக்கவில்லை ) பதிவிற்கு பிறகு குறுக்கு விசாரணை மேற்படி சாட்சி பதில் கூற தொடரப்படுகிறது.

சிவில் நீதிமன்றத்தில் நான் வழக்கு கொடுக்கும்போது நான் என்னுடைய வேளாண்துறையில்ல தினசரி கையொப்பம் செய்த வருகைப்பதிவேட்டிலுள்ள என்னுடைய கையொப்பங்களுடன் ஒப்பந்த பத்திரத்திலுள்ள கையொப்பங்களையும் ஒப்பிட்டு பார்க்க கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. தடயவியல் அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு உடல் நிலை சரியில்லாததால் படித்து பார்த்தேனா என்று ஞாபகமில்லை. அந்த வழக்கில் என்ன நடந்தது என்று எனக்கு ஞாபகம் இருக்கிறதா என்றால் இல்லை. அந்த கையெழுத்து நிபுணருக்கு அனுப்பும்போது அந்த வழக்கின் வக்காளத்து, பிற ஆவணங்களையும் சேர்த்து அனுப்பப்பட்டதா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த சிவில் வழக்கின் தீர்ப்புரையும் படித்து பார்க்கவில்லை என்றால் ஞாபகமில்லை. பிரச்சனைக்குரிய கையெழுத்து என்னுடையது அல்ல என்பதை தவிர வேறு எதுவும் எனக்கு ஞாபகமில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கு சம்மந்தமாக எத்தனை கையெழுத்து போட்டேன், போலிசாரிடம் எத்தனை கையொப்பம் போட்டேன் என்று ஞாபகமில்லை என்றால் சரிதான். சிவில் வழக்கின் தீர்ப்பு எனக்கு பாதகமாக வந்ததா அல்லது சாதகமாக வந்ததா என்று ஞாபகம் இருக்கிறதா என்றால் ஞாபகம் இருக்கிறது. அந்த தீர்ப்புரையை போலிசாரிடம் புகார் கொடுக்கும்போது கொடுத்தேனா என்றால் உயர்நீதிமன்றத்தின் உத்தரவு ஒன்றை நான் கொடுத்தேன். புகாரில் உயர்நீதிமன்ற உத்தரவின் தேதி, எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த புகாரை கொடுக்கும்போது பிரச்சனைக்குரிய ஒப்பந்த பத்திரத்தின் நகலை போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை என்று தலையாட்டுகிறார்.

1991 ம் ஆண்டு எனது கணவர் மூலம் பைசல் ஆகிவிட்ட பிறகு அந்த நிலத்திற்கு விலை ஏறிவிட்டதால் பொய்யான புகார் கொடுத்து வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல. நான் சிவில் வழக்கு பணம் கேட்டு போடவில்லை, நிலம் என்னுடையது என்று விளம்புகை செய்ய சொல்லிகேட்டேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் கையெழுத்து ஆய்வு நிபுணரை நீதிமன்றத்திற்கு வரவைத்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் முறையாக பவர் கொடுத்ததை பயன்படுத்தி தான் இரண்டாவது எதிரி சரியான பிரதிபலனில் சொத்தை கிரையம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் புகாரில் கூறும் குற்றச்சாட்டானது இரண்டாவது எதிரிக்கு பொருந்தாது என்றால் சரியல்ல. சிவில் வழக்கு எனக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் நீங்கள் தான் தள்ளுபடி செய்துவிட்டீர்கள். பைசல் ஆகிவிட்ட நில பரிவர்த்தனை அதிக பணம் பறிக்க இவ்வாறு பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.